JAFFNA

★ தமிழர் விடுதலைக்கூட்டணி வன்மையான கண்டனம்

ஆஸ்பத்திரி அழிப்பு அத்துமீறிய செயல்!

யாழ்ப்பாண பொதுவைத்தியசாலையை இலங்கை அரசாங்கம் மூடிவிட முடிவு செய்தது, சிறிலங்கா அரசாங்கத்தின் அத்துமீறிய செயலாகும். இம் முடிவை உடனடியாக கைவிடவேண்டும் என்று நேற்று சென்னையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல்குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் வாழும் கிராமங்களை எரித்து, பொதுமக்களை கொலைசெய்தும், சித்திரவதை செய்துவரும் அரசாங்கம் தமிழர்களை முற்றிலுமாக அழிக்கத் திட்டமிட்டிருப்பதை கூட்டணியின் அரசியல்குழு வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் அரசாங்கம் வெளிநாட்டுக் கூலிப் படையினரையும், இஸ்ரேலியப் படைகளையும் துணைகொண்டே தமிழர்களை தாக்கிவருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது. யாழ்ப்பாணப் பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள் மூலம் தமிழர்களைக் கொலைசெய்து வருவது இலங்கை அரசின் இயலாத் தன்மையே எனவும் கூட்டணி தெரிவித்துள்ளது.

விலை ரூபா 1·25

REGISTERED AS A NEWSPAPER

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

MURASOLI

முரசு 1 ஒலி 159 வியாழன் 07 - 05 - 1987 (சித்திரை 24) றம்ழான் 08

சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் சொல்கிறார்

தமிழீழ பிரிவினையை இந்தியா ஆதரிக்க ஆரம்பித்து விட்டது

எம். ஜி. ஆரின் 4 கோடி ரூபா நிதியுதவி அங்கீகாரத்துக்கான முதற் கட்டமாகும்!

(கொழும்பு)

தமிழீழப் பிரிவினையை இந்திய அரசு ஆதரிக்க ஆரம்பித்துவிட்டது என்பது இப்போது நன்றாகத் தெரிகின்றது. தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கும் நான்கு கோடி ரூபா நிதியுதவியை மத்திய அரசு அங்கீகரிப்பது பிரிவினையை ஆதரிக்கும் முதற்கட்ட நடவடிக்கை என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மக்களுக்கு நான்குகோடி ரூபா உதவி வழங்கும் தமிழக அரசின் நடவடிக்கையை இந்திய மத்திய அரசும் அங்கீகரித்துள்ளதானது இதுவரை மறைமுகமாக நடந்தவைகள் இப்பொழுது பகிரங்கமாக நடக்க ஆரம்பித்துள்ளதைக் காட்டுகின்றது. அமெரிக்க ஜனாதிபதி ரொனல்ட் றீகன் நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு மருந்து வகைகளை வழங்குவதாகக்கூறி நிதி உதவிகளையே செய்துவந்தார். தமிழக அரசின் நடவடிக்கை இதையே தனக்கு நினைவூட்டுவதாகவும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா மேலும் தெரிவித்தார்.

மேதினத்தன்று இடம்பெற்ற வன்செயல்களால் காலில் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ள கொல்வின். அதுபற்றி விளக்க மளிக்கையில், நிச்சயமாக இது

... 6 ஆம் பக்கம் பார்க்க



ஆஸ்பத்திரியை மூடுமாறு அரசு விடுத்த உத்தரவின் பின்னர் நகரக் கடைகள், பஸ் நிலையம் ஆகியவை மூடம் மாறியதையடுத்து வெறிச்சோடிக் காணப்படும் யாழ்நகரை படத்தில் காணலாம். (படம்: வி. ஆனந்த்)

மத்திய கல்லூரி அதிபர் அலுவலகம் முற்றாக சேதம்

கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களில் ஒன்று மத்திய கல்லூரியில் அதிபரின் அலுவலகத்தினுள் விழுந்து வெடித்துள்ளது. இதனால் அதிபரின் அலுவலகம் பலத்த சேதமடைந்துள்ளதுடன் அங்கிருந்த தளபாடங்களும், உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

யாழ். தமிழ் பொலிஸார் பகிஷ்கரிப்பு!

நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு கடமைக்குச்சென்ற தமிழ் பொலிஸார் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி, ஷெல் பிரயோகங்களை அடுத்து நேற்று பொலிஸார் எவரும் பொலிஸ் நிலையத்திற்கு கடமைக்குச் செல்லவில்லை. இவர்கள் தமது வரவு ஒப்பங்களை வைத்தியசாலையில் உள்ள பொலிஸ் பிரிவில் இட்டனர்.

கடந்த சில தினங்களாக தொடரும் ஷெல், துப்பாக்கிப் பிரயோகங்களே காரணமாக கடமைக்கு செல்லாதிருந்த பொலிஸார், யாழ். பொலிஸ் அத்தியட்சகரின் பாதுகாப்பு உறுதிமொழிக்

—6ஆம் பக்கம் பார்க்க

ஜே.வி.பி. மருத்துவமாணவர் 22பேர் பொலிஸால் கைது

தடைசெய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களாகச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் பேராதனை பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த இருபத்திரண்டு மாணவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் பேராதனை பல்கலைக்கழகத்தின் வைத்தியபீட மாணவர்கள்

—6ஆம் பக்கம் பார்க்க

இந்திய அரசுக்கு ஆத்திரம் ஏன்?

தமிழ்ப்போராளிகளை ஒழிக்க வேண்டுமாயின் இலங்கை இந்தியாவுடனான தனது உறவுகளை மறு ஆய்வு செய்யவேண்டும் எனவும் வெளியுறவுக் கொள்கைகளை மாற்றியமை

—6ஆம் பக்கம் பார்க்க

பதுங்கு குழியுள் பிரசவம்: தாயும் சேயும் நலமுடன்

(அச்சுவேலி)

தொடர்ச்சியான 'ஷெல்' ஏவுதலினால் பதுங்கு குழிக்குள் பதுங்கிக் கொண்ட பெண் அப் பதுங்கு குழிக்குள்ளேயே பிள்ளை ஒன்றைப் பிரசவித்தார். இச் சம்பவம் அச்சுவேலியில் உள்ள பத்தமேனி என்ற கிராமத்தில் காலாளைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இரவு 11-30 மணியில்

—6ஆம் பக்கம் பார்க்க

பளபளக்கும் வாள்களுடன் மஞ்சள் உடை இராணுவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முகாமைச் சேர்ந்த சுமார் அறுநூறுக்கும் மேற்பட்ட படையினர்வட்டக் கச்சி பகுதிகளில் கடந்த இரு நாட்களாக தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். திரும்பிவரும்போது நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் முகாமுக்கு கொண்டு வரப்பட்டு பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

வாகனங்களின்றி காலநடையாகவே சென்ற இப்படையினரில் ஒருவித மஞ்சள்நிற காக்கி

—6 ஆம் பக்கம் பார்க்க

அல்லைப்பிட்டியில் ஆசிரியை ஹெலியின் சூட்டுக்குப் பலி

(காவலூர்)

அல்லைப்பிட்டியில் கடைத் திறப்புவிழாவில் கலந்து கொண்டவர்கள் மீது ஹெலிகப்டர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இளம் பெண் மூன்று சிதறி ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார். சிலர் காயமடைந்தனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

மரணமான இளம் பெண் பாலர் பாடசாலை ஆசிரியையான அந்தோனி ஞானமலர்

—6 ஆம் பக்கம் பார்க்க

மருத்துவபீட மாணவரும் ஊழியரும்இன்று ஊர்வலம்

யாழ். வைத்தியசாலையை மூடும் அரசின் உத்தரவைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் மன்றமும், யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கமும் இணைந்து கண்டன ஊர்வலமொன்றை இன்று நடத்தவுள்ளார்கள்.

—6 ஆம் பக்கம் பார்க்க

பட்டியல்: 4

நெல்லியடியில் ஆங்கிலப் பயிற்சிபெறும் பல்கலைக்கழகப் புதிய மாணவர்கள்

இவ்வாண்டு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகி நெல்லியடி மத்திய கல்லூரியில் ஆங்கிலப் பயிற்சிக்குத் தெரிவாகும் மாணவரின் விபரம்:-

முகாமைத் துவக்கல்வி:- எஸ். கணேசலிங்கம் [பருத்தித்துறை], வி. கல்யாணி [தும்பளை], ஏ. ரவீந்திரநாதன் [தொண்டமானாறு], கே. செல்வமணி [கரணவாய்], ஜீ. சுப்பிரமணியம் [துன்னாலை], கே. தேவராஜ்ஞினி [வதிரி]

வர்த்தகம்:- எஸ். அமுதா [புலோலி], சி. அருந்தவன் [புலோலி], எஸ். பானுமதி [புலோலி], என். பாமா [புலோலி], கே. பாமா [கரவெட்டி], வி. வி. லீலாவதி [கரவெட்டி]. ஜே. எம். எம். றிம்கலின் [அச்சுவேலி], ரீ. பாமதி [கரவெட்டி], ஏ. பிரபாகரன் [அல்வாய்], பி. ரஞ்சன் [பருத்தித்துறை], என். சர்வேஸ்வரன் [வதிரி], ஏ. வி. சோதீஸ்வரன் [அல்வாய்], பி. உதயசூரியன் [பருத்தித்துறை].

கலை:- எஸ். என். கே. கமலேஸ்வரி [துன்னாலை], எஸ். டக்ஷிதி [அச்சுவேலி] யூ. என். நிர்மலதேவி [உடுப்பிட்டி], எம். எம். ஏ. அந்தோனிப்பிள்ளை [நெல்லியடி], கே. ஜெயராணி [கரணவாய்], எஸ். கல்பனா [பருத்தித்துறை]. கே. திருச்செல்வம் [துன்னாலை], எஸ். எஸ். சுமதி [துன்னாலை], பீ. சூரியகுமாரி [பருத்தித்துறை], கே. எஸ். யோகவதி [தாளையடி].

சட்டம்:- எஸ். முரளீதரன் [கரவெட்டி], எஸ். சோபசுந்தரம் [கரவெட்டி], ஆர். யசோதரா [புலோலி].

வைத்தியம்:- எஸ். காமினி [புலோலி], எம். மஞ்சுளா [வல்வெட்டித்துறை], பி. மணிவண்ணன் [துன்னாலை], எஸ். மணிவண்ணன் [பருத்தித்துறை], எஸ். நடராஜா [புலோலி], ரீ. நகிரன் [பருத்தித்துறை], பி. ரமேஷ் [பருத்தித்துறை], எஸ். ராஜசேயா [வதிரி], எஸ். இராதமார்க்கண்டன [வல்வெட்டித்துறை], ஜீ. என். இரத்தினம் [பருத்தித்துறை]

மிருகவைத்தியம்:- எஸ். வசிகரன் [தம்பசிட்டி].

விவசாயவிஞ்ஞானம்:- கே. புனிதமதி [அல்வாய்], ஆர். இராஜமோகன் [அல்வாய்], என். சண்முகதாசன் [புலோலி], எஸ். வி. சிவஞானசிங்கம் [கரவெட்டி]. கே. சூரியகுமார் [பருத்தித்துறை] எவ். எக்ஸ். ஜே. கனிசியஸ் [புலோலி] சீ. மதியழகன் [பருத்தித்துறை]. பி. பி. நெடுமாறன் [தும்பளை], எஸ். பிரகலாதன் [கரவெட்டி], கே. எஸ். கிருஷ்ணபிள்ளை [கரணவாய்], வி. எஸ். தேவகுமார் [புலோலி].

உயிரியல் விஞ்ஞானம்:- எஸ். சண்முகலிங்கம் [உடுப்பிட்டி], ஆர். சாந்தனி [கரவெட்டி], கே. ஜெகந்தனி [கரவெட்டி], ஆர். ஜெயவதனி [வதிரி], ஐ. கந்தசாமி [புலோலி], ஏ. பணிமேசலை [பருத்தித்துறை], பி. முருகதாஸ் [தொண்டமானாறு], வீ. பி. இராமமூர்த்தி [கரவெட்டி] ஜே. ரவிச்சந்திரன் [தும்பளை], கே. திருமலதேவி [பருத்தித்துறை], எஸ். வசந்தி [புலோலி], வி. வைரமுத்து [தொண்டமானாறு].

பொறியியல் 1: எஸ். ரீ. அகிலன் [புலோலி], பீ. அன்பழகன் [புலோலி], வீ. பாலசிங்கம் [புலோலி], ஆர். கிரிதரன் [புலோலி], கே. கமலினி [கரவெட்டி]. எஸ். குழுஜினி [அல்வாய்], கே. ஏ. எஸ். மகேந்திரன் [வல்வெட்டித்துறை], ஏ. குகராசாமி [பருத்தித்துறை]. ரீ. மகேந்திரன் [வல்வெட்டித்துறை], கே. முரளி [புலோலி], வீ. நளினி [கரவெட்டி], ஜே. பிரபாகரன் [கரவெட்டி], ஏ. ஸ்ரீகுமாரன் [கரவெட்டி], ஈ. சண்முகராஜா [புலோலி], ஈ. சாந்தசொரூபன் [கரவெட்டி], எஸ். சிறிசந்திரிக்கா [நெல்லியடி] எஸ். சிறிஸ்கந்தராஜா [பருத்தித்துறை], பி. சுகந்தி [கரவெட்டி], எஸ். ரீ. தயாகரன் [கரவெட்டி], எஸ். ரீ. சுதர்சன் [கரவெட்டி] எஸ். எஸ். தர்மகுலசிங்கம் [புலோலி], ரீ. ரீ. வசந்தகுமார் [வதிரி], எஸ். விக்னராஜா [புலோலி],

பொறியியல்:- எஸ். அகிலன் [தம்பசிட்டி], கே. பாலகிருஷ்ணன் [புலோலி], வீ. குகராஜன் [புலோலி], கே. முருகதாஸ் [பருத்தித்துறை], பூரணகுமாரன் [துன்னாலை], பி. சுகந்தி [கரவெட்டி], எஸ். ரீ. தயாகரன் [கரவெட்டி], எஸ். ரீ. சுதர்சன் [கரவெட்டி] எஸ். எஸ். தர்மகுலசிங்கம் [புலோலி], ரீ. ரீ. வசந்தகுமார் [வதிரி], எஸ். விக்னராஜா [புலோலி],

பௌதிகவிஞ்ஞானம்:- கே. இளங்கீரன் [உடுப்பிட்டி], பீ. கே. மணிவண்ணன் [புலோலி], வீ. மணிவண்ணன் [வதிரி], ரீ. மோகன் [உடுப்பிட்டி], வீ. முரளி [அல்வாய்] எஸ். நடராஜசுந்தரம் [பருத்தித்துறை] பி. பகிரதி [புலோலி], கே. புனிதவதி [கரணவாய்], எஸ். ராஜசேகர் [நெல்லியடி] ரீ. ரமேஷ் [அல்வாய்], எம். ரங்கநாதன் [தும்பளை], கே. எஸ். ரவிச்சந்திரன் [தாளையடி], வீ. செல்வராஜா [கரவெட்டி], செந்தில்செல்வம் [வல்வெட்டித்துறை], வீ. சிவபாலன் [கரவெட்டி], வீ. சிவகுமார் [கரவெட்டி], எஸ். சிவகுமார் [கரணவாய்],

ஜே. சிவபாதம் [பருத்தித்துறை], எஸ். சிவராஜா [துன்பளை], கே. சிவதாஸ் [புலோலி], ரீ. சுஜாதா [கரபார்மசி], கே. எஸ். சுரேஷன் [துன்பளை], கே. சுதாகரன் [கரவெட்டி], கே. தமிழ்ச்செல்வி [நெல்லியடி], வீ. எஸ். தர்மதி [வதிரி], பீ. தவநாதன் [கப்பர்மலை] எஸ். தயாநிதி [கரவெட்டி], சி. கே. உதயமூர்த்தி [கரவெட்டி], எஸ். வல்லிபுரம் [நெல்லியடி], பீ. வசந்தகுமார் [கரவெட்டி], எம். விஜயகம் [புலோலி], என். யசோதரா [பருத்தித்துறை]

பொருள் அளவியல்:- ஏ. முகுந்தன் [உடுப்பிட்டி], பீ. மணிவண்ணன் [புலோலி], எம். எஸ். செல்லத்துரை [புலோலி], பீ. சிதம்பரநாதன் [பருத்தித்துறை], எஸ். தயாநிதி [புலோலி], ஜீ. கஜமோகன் [பருத்தித்துறை].

இந்து இளைஞர் பேரவைக்கூட்டத்தில் பேச்சு:

இரு பஞ்சாங்கங்களும் கருத்தில் இணங்கவேண்டும்

(கொழும்புத்துறை)

திருக்கணித பஞ்சாங்கத்தின் கணிப்பும் இந்தியாவிலிருந்து வெளிவரும் பஞ்சாங்கங்களின் கணிப்பும், இலங்கையிலிருந்து வெளியாகும் இரு சிறந்தபஞ்சாங்கங்களின் கணிப்புகளும் ஒத்ததாக இருக்கின்றதென்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைக் கூட்டத்தில் திருக்கணித பஞ்சாங்க உரிமையாளர் தெரிவித்தார்.

இக்கூட்டம் நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் இரு பஞ்சாங்கங்களும் சைவசமய நிகழ்ச்சிகளை வெவ்வேறு தினங்களில் குறிப்பிட்டு வேறுபடுவதால், பஞ்சாங்கங்களைச் சரியாகக் கணித்து ஒரே தினத்திலேயே சமய நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பட வேண்டிய அவசியம் பற்றி ஆராயப்பட்டது. வாக்கிய பஞ்சாங்க உரிமையாளரி சுகவீனம் காரணமாகக் கூட்டத்திற்குச் சமூகம் அளிக்கவில்லை.

தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் பேசும்பொழுது, "இரு பஞ்சாங்க உரிமையாளர்களும் ஒத்தகருத்துக்களை வெளியிட முன்வரவேண்டும். எமது சமய வளர்ச்சிக்கு இரு பஞ்சாங்க உரிமையாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதற்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையும், நல்லை ஆதீனகர்த்தாவும் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள்" என்று கூறினார்.

பேரவைச் செயலாளர் திரு. இ. தவகோபால் நன்றி கூறினார்.

யாழ். மாநகர சபைக்கு தனி அம்புலன்ஸ் வண்டி

யாழ். மாநகரசபை அவசர வேளைகளில் முதலுதவிச் சிகிச்சை அளிப்பதற்கென சகல வசதிகளையும் கொண்ட அம்புலன்ஸ்வண்டி ஒன்றைக் கொள்வனவு செய்யவுள்ளது.

இந்த அம்புலன்ஸ் சேவை மாநகர தீயணைப்புச் சேவையுடன் இணைந்ததாக இருபத்தி நான்கு மணி நேரமும் இயங்கும். இதன் அலுவலகம் நல்லூரில் உள்ள தீயணைப்புப் படை அலுவலகத்தில் அமைந்திருக்கும். முதலுதவிப் பயிற்சி பெற்ற மாநகரசபை ஊழியர்கள் எந்நேரமும் தயாரான நிலையில் இங்கு இருப்பர் என மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

ஷெல் தாக்குதல்கள், அல்லது விமானத்தாக்குதல்கள் மாநகரசபைப் பிரதேசத்தில் நடைபெறும் சமயங்களில் இந்த அம்புலன்ஸ் வண்டி ஸ்தலத்திற்கு விரைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை வழங்கி அவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மின்சாரம் அடிக்கடி தடை

(பண்டத்தரிப்பு)

பெரியவிளான், சிறுவிளான் பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுகிறது. இப்பகுதிக்கு காங்கேசன்துறையில் உள்ள மின்சார பகுதியினரே பொறுப்பாக இருப்பதால் உடனே புகார் செய்யமுடியாத நிலை ஏற்படுகிறது. அத்துடன் அண்மைக்கால சப்பவங்களையடுத்து காங்கேசன் துறைக்கு செல்வதற்கும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதிக்கு அண்மையில ஒரு மின்சாரப் பகுதியினரை ஏற்படுத்துமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

கிராம அபிவிருத்தி சங்கம்

மண்டைதீவு கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்கள்.

தலைவர்: திரு. அ. ஜெயகுணதிலகம், உபதலைவர்கள்: திரு. க. இராசநாயகம், திரு. அ. பத்மராஜா, உபசெயலாளர்: திரு. ஏ. எஸ். சோமசுந்தரம், பொருளாளர்: திரு. ச. தனபாலசிங்கம். நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

சீக்கிரச் சிறுவிளம்பரம்

கல்வி

புதிய வகுப்புகள் க. பொ. த. (உயர்) 89 கலை/வர்த்தகம், விஞ்ஞானம். ஆண்டு 4 5 6, 7 8, 9, 11 ஆரம்பம்: 9-5-87 பி. ப. 3 மணி மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி.
04122

பாணவிடை பரிபாலனசபை நிர்வாகிகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பாணவிடை சிவன்கோவில் புதிய பரிபாலன சபை நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: டாக்டர் ஆ. பேரின்பநாதன், செயலாளர்: திரு. கா. கந்தசாமி, பொருளாளர்: திரு. டி. பாலசிங்கம். மேலும் பதினைந்து நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

புதிய பஸ்தரிப்பு நிலையங்கள்

(எழுதுமட்டுவாள்)

அண்மையில் கைதடியில் வீரமரணமடைந்த பதினைந்து போராளிகளின் நினைவாக இத்தரவில் மக்களால் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு பஸ்தரிப்பு நிலையங்களுக்கான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. விரைவில் இவைகளுக்கான திறப்புவிழா நடைபெறவுள்ளன.

மறைந்த அதிபருக்கு இரங்கலுரை

(புங்குடுதீவு)

மறைந்த புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலய அதிபர் மு. நடேசுவின் இறுதிச்சடங்கின் போது தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சடாட்சர சண்முகதாஸ் உட்பட பலர் இரங்கல் உரை நிகழ்த்தினர்கள்.

பதவி உயர்வு

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட எட்டு விசேட சேவை உத்தியோகத்தர்களையும் கிராம சேவையாளராக பதவி உயர்த்தி தற்போதுள்ள பதின்னான்கு கிராம சேவையாளர் பிரிவுகளையும் இருபத்திரண்டாக அதிகரிக்க கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவித்துள்ளார்.

ருதுசோபன அழைப்பிதழ்

அன்புடையீர்!

பிரபவ ஆண்டு சித்திரை மாதம் 27 ஆம் நாள் (10-5-1987) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் எமது செல்வப் புதல்வி

ந. தசீலா

அவர்கட்கு ருது சாந்தி செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தங்கள் சுற்றஞ் சூழ வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

செல்லையா தருமலிங்கம் குடும்பத்தினர், (ஓய்வுபெற்ற தபால் அதிபரும், கப்பல் வானெலி இயக்குநரும்)

(நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை).

050181

இடமாற்றம்

தற்போதைய சூழ்நிலைகள் காரணமாக ஸ்ரான்லி வீதியிலிருந்த எமது ஸ்தாபனம் இன்று தொடக்கம் 424, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

தம்பிஐயா அன் கோ

[பிரபல மின்சார உபகரண வியாபாரிகள், மின்சார ஒப்பந்தக்காரர்கள்]

424, கே. கே. எஸ். வீதி,

[வீடியோ பிரசாத்துக்கருகாமையில்]

யாழ்ப்பாணம்.

050191

நல்வாக்கு
ஒழுக்கங்களின் தாய், குறைவான பேச்சு.
— நபிகள் நாயகம்

ஆர். ஜீ. பில்டிங், அட்டன்லி ரோடு, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 25007, 25008

இதயநாதம்

அறிக்கை பயன்தராது; செயற்திட்டம் வேண்டும்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை நாளையுடன் மூடி, தமிழ் மக்களின் வைத்தியசேவைக்கும் தடைபோடும் அரசாங்கம், ஆஸ்பத்திரியை மூடுவதற்கான காரணத்தை இப்போதுதான் பகிரங்கப்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் அரசாங்கம் விடுத்த இரண்டு பந்தி அறிக்கையொன்று இதற்கான காரணங்களைக் கூறியுள்ளது.

"யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பாதுகாப்பற்ற பிரதேசத்தில் இருப்பதால், அடிக்கடி தாக்குதலுக்குள்ளாகி, கட்டடங்கள் சேதமாகிவருகின்றன. இதிலிருந்து ஆஸ்பத்திரியைக் காப்பாற்றுவதற்காக தற்காலிகமாக இதனை மூடவேண்டியுள்ளது" என்று அரசாங்க அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்த அறிக்கையில் முக்கியமான கவனத்தை ஈர்ப்பவை இரண்டு.

ஒன்று 'பாதுகாப்பற்ற பிரதேசத்தில்' ஆஸ்பத்திரி இருப்பது;

இரண்டாவது ஆஸ்பத்திரி "தற்காலிகமாகவே" மூடப்படுகின்றது.

இவ்விரண்டு விடயங்களையும் நிதானமாக அணுகி ஆராய்ந்தால் அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாட்டை நன்கு புரிந்து கொள்ளமுடியும்.

ஆஸ்பத்திரி இருக்கும் பகுதி பாதுகாப்பற்ற பிரதேசம் என்பதன் அர்த்தம் என்ன?

யாழ்ப்பாண நகரத்தின் மையப்பகுதியில், பஸ் நிலையம், மின்சார நிலையம், சுப்பர் மார்க்கட் ஆகியவைகளுக்கு அருகாமையில் பல வருடகாலமாக இயங்கிவரும் ஆஸ்பத்திரிப் பிரதேசம், திடீரென பாதுகாப்பற்ற பிரதேசமாக எவ்வாறு மாறமுடியும்.

தொடர்ந்து இராணுவத் தாக்குதலால் ஆஸ்பத்திரி சேதமாக்கப்பட்டு வந்துள்ளது. கட்டடங்கள் தகர்க்கப்பட்டுள்ளன.

நோயாளிகள், ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். படுகாயத்துக்குள்ளாகியுள்ளனர்.

அப்படியிருந்தபோதிலும் டாக்டர்கள், தாதிகள், ஊழியர்களின் தியாக மனப்பான்மையினால் வைத்தியசேவை பாதிப்புறாது தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளமையை நாம் குறிப்பிடவேண்டும்.

சிலில் நிர்வாகிகள், ஆஸ்பத்திரி அதிகாரிகள் இப்பகுதியை பாதுகாப்பற்ற பிரதேசமென்று பிரகடனம் செய்திருந்தால், அரசாங்கத்தின் முடிவை நாம் நியாயமான தென ஏற்றுக்கொண்டிருக்கலாம்.

ஆனால் அரசாங்கம் தனது தாக்குதலை உக்கிரப்படுத்துவதற்காகவும், யாழ்நகரை இராணுவமயப்படுத்துவதற்காகவும், ஆஸ்பத்திரியை பாதுகாப்பற்ற பிரதேசமென்று பிரகடனம் செய்துள்ளமை ஒருதலைப்பட்சமான முடிவு.

அடுத்ததாக, இதனை ஒரு தற்காலிகமான நடவடிக்கை என்று கூறியிருப்பது. தமிழர்களை முட்டாள்களென அரசாங்கம் நினைபபதையே எடுத்துக்காட்டுகின்றது.

ஒரு பாடசாலையை தற்காலிகமாக சில வாரங்களுக்கு மூடலாம்.

ஒரு வர்த்தக நிலையத்தை தற்காலிகமாக மூடலாம்;

ஒரு பஸ் நிலையத்தைக்கூட அசௌகரியங்கள் இருந்தாலும் தற்காலிகமாக இடம்மாற்றலாம்.

ஆனால் ஒரு ஆஸ்பத்திரியை, அதுவும் ஒரு மாகாண ஆஸ்பதிரியை, அதற்கும் மேலாக ஒரு போதனா வைத்திய சாலையை தற்காலிகமாக மூடுவதென்பதும், அல்லது தற்காலிகமாக இடம்மாற்றுவதென்பதும் எவ்வாறு சாத்தியமாகும்.

ஆஸ்பத்திரி என்பது வெறுமனே நோயாளிகளை நிற்கவைத்துப் பரிசோதனை செய்து, மருந்து வழங்கும் 'பிளினிஸ்' கட்டடமல்ல.

ஆய்வு கூடங்கள், பரிசோதனைக் கூடங்கள், எக்ஸ்றே இயந்திரங்கள், இரத்தவங்கி, சத்திரசிகிச்சை, மகப்பேற்று வசதிகள் மட்டுமன்றி பல நூற்றுக்கணக்கான நோயாளிகளைத் தங்கவைத்து சிகிச்சையளிக்கும் வார்ட் வசதிகளையும் கொண்ட ஒரு மத்திய சுகாதார நிலையம் என்பதை அரசாங்கம் மறந்து விட்டது எமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது.

அல்லது விரைவில் கொன்று அழிக்கப்படவிருக்கும் தமிழர்களுக்கு ஆஸ்பத்திரியும், வைத்திய சேவையும் எதற்காக என்றும் 'ஹிட்லர் ஆட்சி' நடத்துபவர்கள் நினைத்திருக்கலாம்.

நியாயம், நீதி என்று எதுவுமே இல்லாத இவர்களுடன் பேசித்தீர்ப்பதற்கு எதுவுமே இல்லை.

ஆஸ்பத்திரியை மூடுவதற்கு கண்டன அறிக்கைகளை விடும் சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள், கட்சிக் கிளைகள் இவைகளை விட்டுவிட்டு உருப்படியாக ஏதாவது செய்ய முன்வரவேண்டும்.

மகஜர்களும், தந்திகளும், அறிக்கைகளும் இன்று செல்லாக் காசாகி விட்டன.

மக்கள் சக்தியைத் திரட்டி, ஆஸ்பத்திரியைக் காப்பாற்ற இன்னமும் ஒருநாள் மட்டுமே அவகாசமுண்டு.

'இந்து' ஆசிரியர் தலையங்கத்தின் மொழிபெயர்ப்பு; நேற்றைய தொடர்

பண்டாரியும் சிதம்பரமும் இந்திய நம்பகத்தன்மையை சிதறடையச் செய்துவிட்டனர்

அதேவேளை, இந்திய அரசோ இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அக்கிரமங்களுக்குப் பரிகாரமான, தெரிவு செய்யப்பட்ட சில பிரதிச் செயல்களில் அண்மையில் ஈடுபட்டுள்ளது. ஆனால், இப்படிப்பட்ட பாரத அரசு, இலங்கை அரசாங்கத்தின் செய்கைகளை கைமேல் நடவடிக்கையாகக் கண்டிக்கத் தவறியது ஏனோ? எதிர்க்கட்சிகளும் இந்தியப் பா.உக்களும் இதனையிட்டு மனங்குமுறியவாறுனமை மிகச் சரியே.

ஆனால் இப்பேர்ப்பட்ட காரிய கருமங்களில், பகுப்பாய்வு என்பது, இராசதந்திர அறிக்கைகளுக்கும் புறத்தோற்றங்களுக்கும் அப்பால் பார்வையைச் செலுத்தக் கற்றுக் கொள்ளல் வேண்டும். அங்ஙனம் செய்யப்பெற்றால், பின்வருவன யாவும் துலாம்பரமாக, வெகு தெட்டத் தெளிவாக, கண்ணிற் படும். முன்னணி முக்கியத்துவம் வகிக்கும் திடீர் திடீரெனக் கடும் மோசமடைந்து வரும் ஒரு பிரச்சினையை எதிர்நோக்கி நிற்கும் உத்தியோக பூர்வமான இந்திய அரசின் கொள்கை, சிதைந்து சின்னபின்னமாகிக் கிடக்கிறது எனலாம். அப்படித்தான் இல்லாவிட்டாலும், அவ்வப்போதைய தனித்தனிப் பிரச்சினைகளுக்கு மாத்திரம் "ஏனோதானோ" பரிகாரம் தேடுவதும், மனக்குழப்பமும் ஏற்ற தகுதியான முமே அக்கொள்கையின் தன்மையாகிவிட்டன என்போம்.

இந்திய அரசின் இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கை அமுலாக்கமானது, எழுந்துள்ள நெருக்கடிக்கு ஏற்பச் செயற்படுதற்கு வெகுவாகத் தவறிவிட்டது. பாரத அரசிற்கு உள்நாட்டுப் பிரச்சினைகள், சிக்கல்கள் உள்ளனவென்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ராஜீவ் காந்தி நிருவாகத்தின் மீது நம்பிக்கை, அதன் வார்த்தைகள், வாக்குறுதிகளின் நம்பகத்தன்மை ஆகியன சம்பந்தமான நெருக்கடி நிலவியது. 1987 பெப்ருவரி, மார்ச் மாதங்களில் பாரத அரசின் விறைத்த நிலைப்பாடும் அதன் அதிகாரிகளின் பரபரத்த ஓடியாட்டமும் அதனை (இலங்கைப் பிரச்சினையின் முதன்மை நிலையை) சுட்டிக்காட்டுவன போலத் தோற்றினாலும், பாரத அரசின் கவனம் பெற வேண்டிய முதன்மைப் பட்டியலின்கண், இலங்கைப் பிரச்சினை வகித்த இடம் சரியாக மாறுன நிலையில் உச்சத்திற்கு இருந்தமை புரிந்து கொள்ளப்படக் கூடியதே.

இவையெல்லாம் இவ்வண்ணமாக இருந்தும், இலங்கையின்பால் ராஜீவ் காந்தியின் கொள்கை இந்நிலைமைக்கு ஏன் வந்துள்ளது? எப்படி வந்துள்ளது? என்பதுதொட்டத் தெளிவாகியுள்ளது. ஏனெனில், இலங்கையில் தமிழரின் உரிமைக் கோரிக்கைப் பிரச்சினைக்கு ஓர் அவசர சிகிச்சை அளிக்க, மேலெழுந்தவாரியாகவும், கணம் தரமான தகுதியின்றியும், அவ்வரசு எத்தனித்துள்ளது. அம் முயற்சியில் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட ஓர் இன மக்களுடன் அது பூண்டுள்ள தோழமை கட்டுக்கோப்பான ஒரு சட்டக் கோப்பினுள் அமைந்ததாக இல்லை. இம் மத்தியஸ்த முயற்சியை வழி நடத்திச் செல்வதற்கு யதார்த்த பூர்வமான ஓர் அடித்தள எல்லைக்கோடு வரைபடவில்லை. இப் பிரயத்தனத்தில் ஈடுபடுகையில், துரந்து செல்லற்கான தந்திரோபாயத் திசை நிர்ணயமாகி இருக்கவில்லை.

"தமிழ் ஈழம்" என்பதற்கு இடமில்லை எனக் கொள்ளப்பட்டது. இவ் விடயத்தின் மீது இந்தியாவில் நிலவிய கருத்தொருமிப்பு (அபிப்பிராய ஒற்றுமை) பாரத அரசின் கொள்கைக்குப் பாரிய அளவில் துணை நின்றுள்ளது. இடமில்லை எனக் கொள்வதோடு, ஓர் ஐக்கிய இலங்கையினுள், சமாதானமான அரசியல் தீர்வொன்றை முன்னேற்றுதலும் ஒருங்கு சேர்ந்து நல்ல, சரியான ஒரு சட்டக்கோப்புக்கு ஏற்பாடு செய்கின்றமை உண்மைதான். ஆயினும், வழிக்குவராத ஒரு பிரச்சினையின் குறித்த அத்தியாவசிய அம்சங்களின் உள்ளோட்டம் தொடர்பில், பாரத அரசின் கொள்கை, நெறிப்படுத்தும் கோட்பாடுகள் என்பவற்றை மாத்திரம் இவை பிரதிபலிப்பன ஆகும்.

இந்தியப் பிரதம அமைச்சர் திரு. ராஜீவ்காந்தி, தமது பகிரங்க அறிக்கைகளிலும், இருபக்கத்துப் பிரதான பாத்திரதாரிகளுடனும் இருந்தாற் போலிருந்து கொண்டு வந்த தொடர்புகளின் போதும், தம்மிடமுள்ள இரு குறைபாடுகளை வெளிப்படுத்தியுள்ளார்: அவரது ஆழமின்மை ஒன்று; மற்றது, பிரச்சினையின் உருப்படியான அம்சத்தை மாத்திரம் அல்லாது, அதிற் சம்பந்தப்பட்ட சர்ச்சைகள், துலைய மான கருத்து வேறுபாடுகள், உணர்ச்சிகளை நுணுக்கமாக உணரும் திறன்கள ஆகியவற்றையும் கூட, சாடத் தவறிவிட்டமை.

இவை எல்லாவற்றினதும் நேர் விளைவாகவும், "ஒருகால் இயக்கம்- ஒருகால் நிறுத்தம்" என்ற செயற்பாட்டுத் தோரணையின் பயனுகவும், உத்தியோக பூர்வமான இந்திய வெளியுறவுக் கொள்கையானது தளம்பிய பேச்சிலும், செயலிலும் ஈடுபட்டு வந்துள்ளது. இந் நெருக்கடியிற் பலியாகி வருவோர் இலங்கைத் தமிழர்கள். அவர்களைத் தாக்குவோர், இலங்கை அரசாங்கதினரும் அவர்களது உள்நாட்டு, வெளிநாட்டுத் தோழர்களும் ஆவர் இந்திய அரசு எனிலோ தாக்கப்பட்டோரையும் தாக்குவோரையும் சமன்படுத்த முனையும் பாங்கில் செயற்பட்டு வந்துள்ளது. அதன் கண்டனக் கணைகள் ஒரு பொழுது இலங்கை அரசையும், இன்னொரு பொழுது தமிழர் விடுதலைப் போராளிகளையும் இலக்காகக் கொண்டன. அச் செயற்பாட்டில், ஓர் அவசர சிகிச்சையே தவிர, சிபார்சு செய்யப்பட்ட இந்திய அரசின் ஒரு தீர்வு எனக் கொள்வதற்குத் தெளிவான எதுவித அறிகுறியோ கிடையாது.

இந்நிலைமையின் ஒன்றுக் கொன்று முரண்பட்ட விநோதமான தன்மை என்னவென்றால், இதன் உருப்படியான விடயங்கள் மீது முன்னேற்றம் காணும் வாய்ப்பை இதோ அணுகிவிட்டோம் எனும் தறுவாயில், நிலைமை செங்குத்தாக, விரைவாக, சீர்கெட்டுப் போக விடப்பட்டு உள்ளது. ஏன்? உள்ளபடியான அத்தியாவசிய தேவைப்பாடுகளோ, இணக்கப்பேச்சு மார்க்கத்தில் ஒருப்பட்டு வராத எத்தனையோ இடைவெளிகளோ கருத்தில் உரியவாறு இருக்கப்படவில்லை. நிலைமை இவ்வாறு ஆனமைக்கு, இந்திய அரசின் வெளியுறவு, குறிப்பாக இலங்கைத் தீவு தொடர்பான, கொள்கை வகுத்திருந்தோரே கனத்த பங்கும் பொறுப்பும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

உச்சி மட்டத்திலிருந்தே திறனற்ற, மனக்குழப்பம் நிரம்பிய நெறிப்படுத்தல் அல்லது வழிகாட்டலுக்கு அமைய, பண்டாரிகளும்சிதம்பரங்களும் பாரத வெளியுறவுக் கொள்கையின் நம்பகத் தன்மையை ஒருவாறுக இறங்கச் செய்துள்ளார்கள். அத்துடன், இக்காட்சித் தோற்றத்தில் உருவாகி வந்த தோழமை அச்சத்தைப் பெலவீனமுறவும் வைத்துள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக, இலங்கையின் மனித இன நெருக்கடியுடன் தொடர்புபட்ட அரசியல், சமுதாய, வரலாற்று, மனோதத்துவ இயல் சர்ச்சைகளை அதவது உருப்படியான சர்ச்சைகளை, உத்தியோகபூர்வமாக அணுகும் விபரங்களை இவர்கள்தாம் கையாண்டு வந்தனர். அத்துடன் ஓர் அரசாங்கத்துடன் (அதாவது இலங்கையுடன்) உறவுகள் பேணுதலில் இடம்பெறும் நுண்ணிய உணர்ச்சிவயமாகக் கூடிய கருமங்களையும் அவர்களே கையாண்டனர். மறுதரப்பில் தமிழர் விடுதலைப் போராளிகளுடன் மாத்திரமன்றி, தமிழர் விடுதலை "மிதவாதிகளுடனும் கூட" அவர்களே தொடர்புகள் வைத்திருக்க வேண்டியோர் ஆயினர்.

(தொடரும்)

ஜே. வி. பி. கிளர்ச்சிக்கு தயாராகிறது

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) 1971 இல் நடத்திய கிளர்ச்சியைப் போன்று மற்றுமொரு கிளர்ச்சியை நடத்த திட்டமிட்டிருப்பதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணியை மற்றைய அரசியல் கட்சிகளுடன் ஒப்பிடாமல் பாராளுமன்ற உறுப்பினர்கள் இக்கிளர்ச்சியை முறியடிக்கமக்கள் ஆதரவைப் பெறவேண்டுமென பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

புகைத்தலுக்கு எதிராக புலிகள்

(கொக்குவில்)

புகைத்தலின் கெடுதிகளை விளக்கி இவற்றுல் வரும் பாரதூரமான விளைவுகளை எடுத்துக்கூறும் வர்ண சுவரொட்டி விளம்பரங்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவக் குழுவினுல் வெளியிடப்பட்டுள்ள இப்பிரசார விளம்பரத்தில் புகைத்தல் தற் கொலைக்கு ஒப்பானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் ஓய்வு பெறுகிறார்

(பூநகரி)

பூநகரி தம்பிராய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த பல வருடகாலமாக அதிபராகக் கடமையாற்றிய திரு. ம சந்திரகாந்தலிங்கம் முப்பத்தைந்து வருட ஆசிரிய சேவையின் பின் ஓய்வு பெறுகின்றார்.

சமூகசேவையாளரான இவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். இவருக்கு பூநகரி கொத்தணி அதிபர் திரு கே. சிவகுமாரன் தலைமையில் ஓர் சேவைநலன் பாராட்டுவிழாவும் அப் பகுதி பெற்றோர்களால் நடாத்தப்பட்டது.

வடமாநில கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்:

தீவுப்பகுதி ஆசிரியர் பற்றுக்குறை தீர ஏற்ற முறையில் இடமாற்றம் நடக்கும்

(காவலூர்)

தீவுப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் நீண்ட காலமாக ஆசிரியர்கள் பற்றுக் குறையுண்டென்பது பற்றி எனக்கு நன்கு தெரியும். ஆசிரிய இடமாற்றத் திட்டம் சரியான முறையில் கடைப்பிடிக்கப்படாததே இதற்குக் காரணமாகும். யாழ். மாவட்டத்தில் ஆறு வருடங்களுக்கு மேல் கடமையாற்றி வரும் ஆசிரியர்களை தீவுப்பகுதி பாடசாலைகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றேன். எந்தப் பாடசாலையாக இருந்தாலும் ஒரே விதமான முறையில் கல்வி போதிக்க நான் நடவடிக்கை எடுப்பேன்.

மேற்கண்டவாறு வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை புதிய கட்டிட திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜயை எம். எம். மன்சூர் குறிப்பிட்டார்.

மேற்படி வித்தியாலய அதிபர் திரு. செ. வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இத் திறப்புவிழா வைபவத்தில் அதிபர் உரையாற்றுகையில்; இந்த வித்தியாசாலை நாவலர் காலத்து பாடசாலை. இதனை நாம் பேணிப் பாதுகாத்து முன்னேற்ற வேண்டும். இங்கு ஆசிரியர் பற்றுக் குறையிருந்தும் இளைப்பாறிய ஆசிரியர்களைக் கொண்டும், வசதிக் கட்டண ஆசிரியர்களைக் கொண்டும் ஓரளவு கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றோம் என்றார்.

இத்திறப்பு விழாவில் நெல்லியடி கல்வி அலுவலக கல்வி அதிகாரி பண்டிதர் பொன். கணேசன், வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. க. ஆறுமுகம், யாழ். கல்வித் திணைக்கள கட்டிட மேற்பார்வையாளர் திரு. பாலச்சந்திரன், வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் சடாட்சரசண்முகதாஸ், வேலணை கொத்தணி அதிபர் மு. சிவராசரெத்தினம், திரு. த. மகாலிங்கம் (தபாலதிபர்) ஆகியோரும் உரையாற்றினர்.

யாழ்நகரில் அலுவலகங்களை ஊழியர்கள் பகிஷ்கரித்தனர்

யாழ். போதனு வைத்திய சாலையை இம்மாதம் எட்டாம் திகதியுடன் மூடுமாறுபோதனு வைத்தியசாலைகள் அமைச்சு விடுத்த உத்தரவை எதிர்த்து நேற்று முன்தினம் யாழ்நகரில் அரசாங்க, கூட்டுத்தாபன, வங்கிஊழியர்கள் வேலைசெய்ய மறுத்தனர்.

இதனுல் யாழ். அரசாங்க செயலகம், கல்வித் திணைக்களம், மாநகரசபை மன்ற அலுவலகம் மற்றும் வங்கிகள் உட்படயாழ்நகரில் அனைத்து அலுவலகங்களும் திறக்கப்படாமல் நேற்று முன்தினம் மூடப்பட்டிருந்தன. இதனுல் யாழ்நகர் ஸ்தம்பிதநிலையை அடைந்திருந்தது. வர்த்தக நிலையங்களிலும் அநேகமானவை மூடப்பட்டிருந்தன. இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்ட போதிலும் அவை நேரகாலத்துடன் மூடப்பட்டன.

இன்றும் இதே போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதினுல் யாழ். நகரம் தொடர்ந்தும் ஸ்தம்பித நிலையிலேயே இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ்நகரில் விட்டு விட்டு ஷெல்தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. ஹெலிகப்டர் ஒன்று அடிக்கடி மண்டைதீவுக்கும் பலாலிக்கும் இடையே பறந்து கொண்டிருந்தது.

அடிப்படைநிலைமாற்றமில்லை

(லண்டன்)

கொழும்பு குண்டுவெடிப்பு சம்பவத்தையடுத்து தமிழ் மக்கள் மீதான சிங்களவர்களின் பழிவாங்கல் தவிர்க்கப்பட்டமைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசைப் பாராட்டியபோதும், இலங்கை அரசு தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை என மனித உரிமைகள் குழுவான சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கையைபாராட்டிசர்வதேச மன்னிப்புச்சபை தந்திகளை அனுப்பி வைத்தது. ஆனுல் இதனை இலங்கை அரசு தனக்கு சாதகமாக பயன்படுத்தி முன்னர் சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்த கண்டனங்களை மூடி மறைக்கப்பார்க்கிறது.

இது அரசாங்க அறிக்கை:

ஆஸ்பத்திரியை மூடுவது தற்காலிக நடவடிக்கையே

யாழ்ப்பாணத்தில் ராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெறும் மோதல்களின்போது யாழ். வைத்தியசாலை பல முறை தாக்கப்பட்டதாலேயே அதனை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக போதனு வைத்தியசாலைகள் அமைச்சு நேற்று முன்தின அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. இப்பகுதியைத் தாக்குதலற்ற பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற யோசனையையும் நடைமுறைப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்த அறிக்கையில் யாழ். வைத்தியசாலை தற்காலிகமாகவே மூடப்படுவதாகத் தெரிவித்துள்ளது. வைத்திய சாலை உபகரணங்கள், ஊழியர்கள், நோயாளர்கள் அனைவரும் மாற்று ஏற்பாடாக பருத்தித்துறை, தெல்லிப்பழை வைத்திய சாலைகளுக்கு மாற்றப்படவுள்ளதாகவும் அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் கிறின் ஞாபகார்த்த வைத்தியசாலையிலும் நோயாளர்களைப் பராமரிக்க விரும்புவதாகவும் அமைச்சின் அறிக்கை தெரிவிக்கிறது.

மருத்துவ மாணவர்கள், மாணவ தாதிமார்களுக்கும் பரீட்சித்துறை தெல்லிப்பழை வைத்திய சாலைகளிலேயே தமது பயிற்சியை மேற்கொள்ளவேண்டும் எனவும், ஆனுல் அவர்கள் விரும்பினுல் வேறேர் போதனு வைத்திய சாலையில் பயிற்சிபெற அவர்களுக்கு வசதிசெய்து கொடுக்கப்படுமெனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அன்பளிப்பு

(வட்டுக்கோட்டை)

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் சனசமூக நிலையத்திற்கு இரண்டரை லட்சரூபா பெறுமதியான ஒன்பதுபரப்புக் காணியை இப்பகுதி மக்கள் நன்கொடையாக வழங்கியுள்ளனர். சிறந்த முறையில் இயங்கி வரும் இந்த சனசமூக நிலையத்திற்கு விளையாட்டு மைதானம் இல்லாமல் இருந்த குறை இதன் மூலம் நீக்கி வைக்கப்பட்டுள்ளதாக சன சமூக நிலையத்தின் தலைவர் திரு. சு. சண்முகம் தெரிவித்தார்.

கூட்டம்

(காவலூர்)

வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கஅங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட் கிழமை வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாட்சரசண்முகதாஸ் தலைமையில் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கண்டனம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை மூடுவதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கையைக் கண்டித்து மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம், மருத்துவபீட மாணவர் மன்றம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பருத்தித்துறை வர்த்தகர் சங்கம், தமிழர் முன்னேற்றக்கழகம் ஆகியனவும் அறிக்கைவிடுத்துள்ளன.

பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★ நோர்வே
★ ஜேர்மனி ★ லண்டன்

● ஜேர்மனி ● நோர்வே ● U. K.

செல்ல விரும்புவோருக்கு கொழும்பில் இருந்து நேரடி ஒழுங்குகள் செய்துதரப்படும். எமது குழு 10-15 திகதி செல்ல இருப்பதால் உங்கள் பிரயாணத்திற்கு எமது காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும் கடந்த 16-04-87 இல் நோர்வே பிரயாணம் செய்தவர்கள் வெற்றிகரமாக முடித்து உள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

● சவூதி அரேபியாவுக்கு

கீழ்க்கண்ட வெற்றிடங்கள் உள்ளன. உடனடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

	S. R.		S. R.
Stevedoring Labrs	350	Winchman	650
Whare House Labrs	350	Forklift Operater	850
Cleaning Labours	325	Trailer Driver	850
Kitchen Helper	325	Car Driver	650
Gang Foreman	550	Crane Operater	700
Ship Foreman	650	Camp Boss	800
Tally Clerk	650	Male Nurse	800
Document Clerk	600	Technical Manager	1700
Office Staff	600	Oprtonal Manager	1700
Pay Roll Clerk	650	Administrative Manager	1700
Cargo Supervisor	750		
Tally Checkers	700	Doctor	2000

சவூதி அரேபியாவுக்கு
பணிப்பெண்கள் தேவை
சம்பளம் 400 S. R.

இரண்டு கிழமைக்குள் பிரயாண ஒழுங்குகள் செய்துதரப்படும்.

● சவூதி அரேபியாவுக்கு

பிரயாணம் செய்வதற்குப் பாஸ்போட் கொடுத்தவர்களுக்குச் சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டு விட்டன. அவர்கள் உடன் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

N.பாலா
ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

05011

கிளைகள்:

● ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்
குப்பிளான் சந்திக்கு அருகாமையில்
குப்பிளான்.

● ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்
வங்களாவடிச் சந்தி
வேலணை.

பிரயாண ஒழுங்கு

★ நோர்வே ★ U K. ★ கனடா

ஆகிய நாடுகளுக்கு உடன் பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். எம்மிடம் பதிந்தோர் யாவரும் பிரயாணம் மேற்கொண்டு முடிந்தது.

மற்றும்

★ சவுதிஅரேபியா ★ குவைத் ★ சிங்கப்பூர்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்கு உடன் செய்து தரப்படும். சகல விதமான வெற்றிடமும் எம்மிடம் உண்டு.

இத்துடன்: குறைந்த சலுகைக் கட்டணத்தில் பாஸ்போட், பொண்ட், விசா, ரிக்கற்றிங் என்பன உடன் செய்து கொடுக்கப்படும்.

விபரங்கட்கு:-

ROSHAN
Kopay Junction
Kopay

05015

மொசப் பொழுது

யாழ்ப்பாணத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகமொன்றில் நடைபெற்ற சம்பவம்.

குறிப்பிட்ட பகுதி உதவி அரசாங்க அதிபர் ஒய்வு பெற்றதையடுத்து அவரது சாதி பேதமற்ற சேவையைக் கௌரவிக்கும் முகமாக ஊர் மக்களால் பாராட்டு விழா நடத்தப்பட்டது. அன்னாரின் பெரிய புகைப்படமொன்றும் அலுவலகத்தில் தொங்கவிடப்பட்டது.

சில நாட்களில் அது மாயமாய் மறைந்துவிட்டது. அந்த இடத்தில் சிறிய படமொன்று தொங்குகின்றது.

இதனை யார் செய்தார்கள்? ஏன் செய்தார்கள்? எல்லாமே மர்மமாக இருக்கிறது.

இது சம்பந்தமாக 'பெரிய இடத்து' விசாரணை நடப்பதாகக் கூறப்படுகின்றது.

● உக்கிரன்

இன்றைய பலன்

மேடம்: பொருட்பேறு, பெரியோர் உதவி வணிகர்களுக்கு வருமானம் அதிகம்; கல்விப் பேறு, வெளியிடத்தில் புதுத் தொடர்பு.

இடபம்: மாதாவழிக் கவலை, பொருள் விரயம், சகோதரர் ஒருவர்க்கு உடல் நலக்குறைவு, பெரியோர் உதவி, மனநிம்மதி.

மிதுனம்: சகோதரவழியால் சஞ்சலம், செய்காரியத்தால் கீர்த்தி, புதுத்தொழிலால் வருமான உயர்வு, பூமியால் பலன்.

கடகம்: குடும்பமகிழ்ச்சி, பணவரவு, மனையில் மங்கள காரியம், மாதாவழிச் சுகம், கன்னியர் மகிழ்வு, பூமிப்பேறு.

சிங்கம்: வீண்பகை, பணநஷ்டம், சோரபயம், தூரதேசப்பிரயாணம் தடை, மாதாவழிக் கவலை, பிதாவழியால் பொருள் சேரும்.

கன்னி: மனச்சஞ்சலம், புத்திரர் வழியால் கவலை, வீண்பிரயாசை, மாமன்வழி உதவி, கைப்பொருள் செலவு, யோசனை அதிகம்.

துலாம்: எதிர்பாராத லாபம் கிடைக்கும், மூத்த சகோதரரால் உதவி, பிரிந்தவர் ஒன்று சேர்வர், காதலர் வாழ்வில் மகிழ்ச்சி.

விருச்சிகம்: தொழில் தடை, பெரியோர் உதவி, வணிகர்களுக்கு நன்மை, வெளியூர் செய்தி மகிழ்ச்சிதரும், அயராமுயற்சி.

தனுசு: பிதாவழி உதவி, இடசுமை கடாட்சம், பணப்புழக்கம், மாதுருவழியால் சுகம், வாக்கு வசீகரம்.

மகரம்: அந்நியர்பகை, வாக்குக் கலகம், உடல் நலக்குறைவு, உற்றார் உறவினர் வருகை.

கும்பம்: தடைப்பட்ட விவாகம் நிறைவேறும், பூமியால் லாபம், தேடிவரும் புகழ், இருதய நோயால் அவஸ்தை.

மீனம்: சத்துரு ஜெயம், தானிய நஷ்டம், வியாபாரம் மந்தம், களஸ்திர வழியுதவி, புதிதாக ஒருவரால் கஷ்டம் நீங்கல்.

● யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

அன்பளிப்பு

[வட்டுக்கோட்டை]

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு தன்னியக்கப் பொறிமுறையில் இயங்கும் மணிக்கூடு ஒன்று அன்பர் ஒருவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இம்மணிக்கூடு ஒலிபெருக்கி மூலம் தன்னிச்சையாகமணி அடித்து மக்களுக்கு நேரத்தை அறிவிக்கும். இதற்கு சுமார் மூவாயிரம் ரூபாசெலவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முகாமைத்துவ பயிற்சி வகுப்பு

[காவலூர்]

காவலூர் தெகுதி பாடசாலை அதிபர்களுக்கும், உப அதிபர்களுக்குமான முகாமைத்துவ பயிற்சி வகுப்புக்கள் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் வேலணை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. இ. க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றன.

இப்பயிற்சி வகுப்பு ஆரம்ப வைபவத்திற்குயாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஜனப் எம். எம். மன்சூர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

நாடக களப் பயிற்சி

(கொழும்புத்துறை)

காவலூர் இலக்கிய வட்டத்தினரின் ஆதரவில் கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் ஞாயிற்றுக் கிழமைகள் தோறும் நாடகக் களப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

இம்மாத முடிவில் மூன்று தினங்கள் நாடகப் பட்டறை ஒன்றை நடாத்தவும் இலக்கிய வட்டத்தினர் ஒழுங்குகள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆசிரியர்களுக்கு சம்பள முற்பணம்

(கரவெட்டி)

நெல்லியடி கோட்டக்கல்வி நிலையத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு மூன்றுமாதச் சம்பள முற்பணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் கோட்டக்கல்வி நிலையத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி இச்சம்பள முற்பணம் வெகுவிரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோஷ்டி மோதல் அபராதம்

(அச்சுவேலி)

அச்சுவேலி -பத்தமேனிக் கிராமத்தில் இரு குழுக்களாகப் பிரிந்து கோஷ்டிச் சண்டையில் ஈடுபட்ட இரு குழுக்களும் விடுதலைப் புலிகளால் தண்டிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

சண்டையில் ஈடுபட்ட இரு குழுக்களும் தலா ஆயிரம் ரூபா குற்றப் பணம் செலுத்தியதுடன் இரண்டு நாள் பதுங்குகுழிகள் வெட்டும் தண்டனையையும் அனுபவித்தனர்.

பத்தமேனி பாரதி வீதிக் குழுவுக்கும், தம்பாலைக்குழுவுக்குமே இம் மோதல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

தண்டனையின் பின் இரு குழுக்களும் ஒற்றுமையாக இருக்கின்றன.

"ஈரான்கேட்" விவகாரம்:

அமெரிக்க நாடாளுமன்றம் பொது விசாரணை

[வாஷிங்டன்]

றேகன் நிர்வாகத்தில் அமெரிக்கா ஈரானுக்கு ஆயுத விற்பனை செய்த விவகாரம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

"வாட்டகேட்" ஊழல் விவகார விசாரணைக்குப்பிறகு பகிரங்க விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டாவது ஊழல் விவகாரம் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணையில் முதலாவது சாட்சியாக அமெரிக்க விமானப்படை சேவையின் முன்னாள் உயர்அதிகாரிஒருவர் சாட்சியமளிக்கவிருக்கின்றார்.

"ஈரான்கேட்" என்று அழைக்கப்படும் இந்த ஊழல் விவகாரம் தொடர்பான மிகச் சரியான தகவல்கள் இவரது சாட்சியத்தில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விவகாரம் தெற்ற்பாக சரியான சாட்சியமளிக்கக்கூடிய முக்ச் சிலரில் இவர் முக்கியமானவராகக் கருதப்படுகிறார்.

இந்த விவகாரம் தொடர்பாக கருத்துக் கூறிய காங்கிரஸ் எதிர்க்கட்சியான ஜனநாயகக்கட்சி சென்ட்டர் டானியல் கே. இனுயிட் கருத்துத் தெரிவிக்கையில்;

இந்த ஈரான் - கோன்ட்ரு விவகாரம் கவலையும் அவமானமும் தரும் விடயமாகும். அமெரிக்கவெளியுறவுக் கொள்கைக்கும் களங்கம் ஏற்படுத்தியுள்ளது.

'பேட்ரியட்' சஞ்சிகை எச்சரிக்கை:

ரசாயன ஆயுத உபயோகம் உலகத்தையே அழித்துவிடும்

(புதுடில்லி)

முதலாம் உலகப் போரில் பதின்மூன்று லட்சம் மக்கள் விஷவாயுக்களால் பாதிக்கப்பட்டனர். இதில், ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். இதற்குப் பின்னர், 1935 -36ல் இத்தாலிக்கும் - எத்தியோப்பியாவுக்கும் இடையில் நடைபெற்றயுத்தத்தில் எத்தியோப்பியர்களுக்கு எதிராக, ஏழு லட்சம் கிலோகிராம் அளவுள்ள நச்சு மருந்துகள் தூவப்பட்டன. சீனவை ஆகிரமித்தபோது, ஜப்பான் ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியது. அமெரிக்க- வியட்நாம் யுத்தத்தின்போது, நச்சு மருந்துகளால் 20 லட்சம் வியட்நாமியர்கள் பாதிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தார்கள். அமெரிக்கா வியட்நாமில் தொண்ணூறு லட்சம் கிலோகிராம் அளவுள்ள நச்சுப் பொருட்களையும், ஐந்து கோடியே ஐம்பது லட்சம் கிலோகிராம அளவுள்ள பயிர்களை, செடி கொடிகளை அழிக்கும் இரசாயன மருந்துகளையும் பயன்படுத்தியது.

தற்போது நடைபெறும் ஈரான் - ஈராக் யுத்தத்திலும் ரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆயுதங்கள் நவீனமயமாக்கப்பட்டு வரும் இன்றைய நிலையில், ஒரு இரசாயன யுத்தம் ஏறபடுமாலை, அது லட்சக்கணக்கான மக்களை பலி கொள்ளும் அபாயம் இருக்கிறது.

இவ்வாறு பேட்ரியட் என்ற இந்திய சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்கள் குறித்து உலகம் முழுவதும் பெரிதும் விவாதிக்கப்படுகிறது. இதற்கு இணையான அளவுக்கு கொடிய இரசாயன ஆயுதங்களும், இதர நாசகார ஆயுதங்களும் உலகம் முழுவதும் குவிக்கப்பட்டுள்ளன. இத்தகைய இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுமாலை, அதன் பாதிப்பு பல தலைமுறைகளுக்கு இருக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

தெ. ஆபிரிக்காவில் "வெள்ளையருக்கே" தேர்தல்

கறுப்பின மக்கள் பெரும் கொதிப்பு

(ஹராரே)

தென் ஆபிரிக்காவில் லட்சக்கணக்கான கறுப்பின மக்கள் சென்ற இரு நாட்களாகவேலை களுக்குச் செல்லாமல் அரசு எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று இரண்டாவது நாளாகதென் ஆபிரிக்காவில் நடந்த 'வெள்ளையருக்கு மட்டும்' என நடத்தப்படும் தேர்தலை எதிர்க்கும் நடவடிக்கையாக இந்த வேலை நிறுத்தத்தை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

ஜோகனஸ்பேக், சேப்ரவுண் போன்ற நகரப்பகுதிகளிலும் வேறு சில இடங்களிலும் குண்டுவெடிப்புகளும் நிலக்கண்ணிவெடிச் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்த வன்முறைச் சம்பவங்களில் உயிர்ச்சேதங்களும் கூடுதலாக ஏற்பட்டுள்ளதாகவும் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன ஒடுக்கல் அடிப்படையில் நடத்தப்படும் அரசின் இதுபோன்ற நடவடிக்கைகளால் கறுப்பின மக்கள் கட்டு மீறிய ஆத்திரம் கொண்டுள்ளனர்.

நாட்டின் சனத்தொகையின் பத்துவீத மக்களுக்காக நடத்தப்படும் இந்தத் தேர்தல் ஏதாவது ஒரு வெள்ளையர் குழு ஆட்சிக்கு வருவதை தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகிறது.

ஜனதிபதிகிரி திறந்துவைத்த காந்தி சனசமூக நிலையம்

மகாத்மாகாந்தியின் நினைவாக இலங்கையில் முதன் முதலில் கட்டப்பட்டது காந்தி சனசமூக நிலையம். இதனைக் கட்டுவதற்கு காந்தி நினைவு நிதியில் இருந்து இந்திய அரசு பணம் வழங்கியது. இக்கட்டிடத்தை, அன்றைய காலத்தில் இலங்கையின் இந்தியத் தூதுவராக இருந்தவரும், பின் காலத்தில் இந்தியக்குடியரசின் தலைவராக இருந்தவருமான திரு. வி. வி. கிரி திறந்துவைத்தார்.

இவ்வாறு அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்தின் 38-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பெற்ற கலை, விளையாட்டு நிகழ்ச்சிகளின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேற்படி நிலையத்தின் ஸ்தாபகரும், வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தாவுமான திரு. வல்லிபுரம் - சின்னப்பு தமது உரையில் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், இந்திய அரசு தெரிந்து வைத்திருக்கிற ஒரு நிலையமாகஇதுதிகழ்கிறது. இலங்கையின் இந்தியத் தூதுவராக இருந்த திரு. பீம் சச்சார், காந்தி எழுதிய நூல்களையும், காந்தியடிகள் பற்றி பிற அறிஞர்கள் எழுதிய நூல்களையும் அவர் நேரில் இவ்விடத்திற்கு விஜயம் செய்து இந்திய அரசின் நன்கொடையாக வழங்கினார். அச்சமயம் நிலையத்தின் தலைவராக நான் இருந்தேன். தூதுவர் எமது நிலையத்திற்கு வேண்டிய உதவிகளை இந்திய அரசு காந்தி நிதியிலிருந்து வழங்கும் எனத் தெரிவித்தார். இவற்றை நாம் மனதில் கொண்டு நிலையம் வளர உழைக்க வேண்டும் என்றார்.

ரஷீத்கராமி ராஜினமா

[பெய்ரூட்]

லெபனான் பிரதமர் ரஷீத் கராமி பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தமது அமைச்சரவை எந்தவித உடன்பாட்டையும் ஏற்கத் தயாராக இல்லாத நிலை காரணமாகவே தாம் பதவி விலகுவதாக பெய்ரூட் வானொலி அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

07-05-1987 வியாழக்கிழமை

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி
MURASOLI

★ போராளிகளின் தாக்குதலால்

ஸ்ரேடிய இராணுவ 'சென்றி' முகாம் வாபஸானது!

கோட்டை இராணுவ முகாமுக்கு பாதுகாப்பாக துரையப்பா ஸ்ரேடியம், பழைய பொலிஸ் நிலைய முன்பகுதி ஆகியவற்றில் இருந்த இராணுவத்தினரின் சென்றிகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

கோட்டையிலிருந்து மேற் கொள்ளப்படும் ஷெல்தாக்கு தல்களுக்கு போராளிகள் தொடுக்கும் பதில் மோட்டார் தாக்குதல்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட தாக அறியப்படுகின்றது.

சிலதினங்களுக்கு முன்னர் போராளிகள் ஏவிய மோட் டார் ஷெல்களினால் குறித்த சென்றிகளில் கடமையில் இருந்த இராணுவத்தினரில் சிலர் கொல்லப்பட்டு அல்லது படுகாயமடைந்து இருக்கலாம் எனவும் அறியப்படுகின்றது.

குறித்த இரு சென்றிகளி லும் இருந்து கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப் பட்டு வந்த சினைப்பர் தாக்கு தல்களினால் குருநகர், பிர தான வீதி பகுதிகளில் பல பொதுமக்கள் கொல்லப்பட் டும், படுகாயமடைந்தும் உள் ளனர் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது. போராளிகளின் மோட்டார் தாக்குதல்கள் காரணமாக பொலிஸ் நிலையப் பகுதியிலும், கோட்டையின் உள்ளும் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பர்

மாணவர்களின் கல்வி முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதினாலும், தொடரும் ஷெல் தாக்குதலி னால் தற்போதைய சூழ்நிலை யில் மாணவர்கள் கல்வியை தொடர முடியாத மன நிலை யில் உள்ளதினாலும், அர சபடைகளின் கெடுபிடி காரண மாக பிறதமிழ் மாவட்ட மாணவர்கள் யாழ். பல்கலைக் கழகம் வந்து சேர முடியாத நிலையிலிருப்பதினாலுமே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறி விக்கப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அலுவலகங்கள் முற்றுக ஸ்தம்பிதம்

யாழ் போதனா வைத்திய சாலையை மூடுமாறு அரசாங் கம் விடுத்த உத்தரவுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் முகமாக யாழ்.நகரில் உள்ள அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள் நேற்றும் கட மைக்கு சமுகமளிக்கவில்லை. இதனால் யாழ்.அரசாங்க செய லகம், கல்வித்திணைக்களம் உட்பட அனேகமான அலுவல கங்கள் மூடப்பட்டிருந்தன.

வேறுபல அலுவலகங்களி லும், நிறுவனங்களிலும் கடமை புரியும் ஊழியர்கள் ஆட்சேபனை தெரிவிக்கும் சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் தத்தமது அலுவல கங்களுக்கு முன்னால் அமர்ந் திருந்தனர். வேம்படி, மத்திய கல்லூரி ஆகியவை நேற்று மாணவர் வரவின்றி விடு முறைக்காக மூடப்பட்டவை போல வெறிச்சோடிக்காணப் பட்டன. மற்றைய பாடசாலை களிலும் மாணவர்வரவு குறை வாகக் காணப்பட்ட தினால் அவை நேரகாலத்துடன் மூடப் பட்டன.

பஸ் நிலையப்பகுதி மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோ டிய நிலையில் காணப்பட்டது.

மூதூரில் கொல்லப்பட்ட பதினெட்டு தமிழரின் விபரம்

(திருமலை)

மூதூரில் இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதலொன் றில் இராணுவத்தினரின் 'பவ்வலோ' வாகனமொன்று சிக்கி பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந் துபட்டித்திடல், பாலத்தோப் பூர் ஆகிய பகுதிகளில் இராணு வத்தினர் மேற்கொண்டஅட்ட காசத்தில் பெருந்தொகையான வீடுகள், கடைகள் எரித்தும் உடைத்தும் சேதமாக்கப்பட்ட துடன் பதினெட்டுப் பேர் சுட் டுக் கொல்லப்பட்டனர்.

செந்தில்மணி (40), கோகு லேஸ்வரி (14), பாலமுருகன் (11), யோகராசா (10), யோகேஸ்வரி (26), கௌரிப் பிரியா (05), ஜெயராதி (01), பத்தினியன் (42), சீதையம்மா (33), நேசன் (16), பிரகாஷ் (13), ஷோபனா (12), அற்புத ராசா (10), கிறிஸ் சாந்தி (07), பொன்னம்மா (55), மேரி (26), செல்லத்துரை, பாலபோடி ஆகியோரே சுட்டுக் கொல்லப் பட்டவர்களாவர்.

தமிழீழத்தை...

குண்டாந்தடிப் பிரயோகத் தாலோ, கண்ணீர் புகை பிர யோகத்தாலோ ஏற்பட்ட காயமல்ல. அரசாங்கத்தின் குண்டில் ஏதோ வகையான இரசாயனத் திரவம் ஒன்று கலந்திருக்கிறது இதனாலேயே தனது கால் எரிந்துள்ளதாக வும் கூறிய அவர் இது ஒரு சாதாரண விடயமல்ல என வும் கூறினார்.

அரசாங்கத்தின் தனிப்பட்ட இராணுவமே இவ்வாறு எதிர் கட்சிகளைத் தாக்கும் நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருவதாக வும் அவர் கூறினார்.

யாழ்...

கமைய செவ்வாய்க்கிழமை கடமைக்குச் சென்றபோதே அவர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை யாழ். பொலிஸ் நிலையத்திற்கு கடமைக்குச் செல்வது பாதுகாப்பற்றதாக இருப்பதினால் தம்மை வேறு மாவட்டங்களுக்கு இடமாற் றம் செய்யுமாறு பல பொலி ஸார் உயரதிகாரிகளைக் கோரி யிருப்பதாகவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

பளபளக்கும்...

யுடை அணிந்தவர்களும் சென் றனர். இவர்கள் ஊர்காவல் படையினராக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. சிலரி டம் பளபளக்கும் வாள்கள் காணப்பட்டதாக வட்டக்கச்சி பொதுமக்கள் தெரிவித்தனர்.

சிசன் டிக்கற் மே 15 வரை

யாழ். பஸ் நிலையத்தில் வைத்து வழங்கப்படும் மாதா ந்த பருவகாலச் சீட்டுக்கள் இனிமேல் கோண்டாவில் சாலையிலும், ஆரியகுளம் சந்தி யில் அமைக்கப்பட்ட தற்கா லிக அலுவலகத்திலும் வைத்தே வழங்கப்படவுள் ளன.

பாதுகாப்பு நிலைமை காரண மாகவே இது இடம்பெறுவ தாகவும், இந்த மாதத்துக் குரிய பருவகால சீட்டுக்களை மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்பு பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் சாலை உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பதுங்கு குழி...

இருந்து தொடர்ச்சியாக வயா விளான் தோலகட்டி மினி முகாம், மேல்மாடி முகாம் என்பவற்றில் இருந்து தொடர்ச்சியாக கிழக்கு நோக்கி இரண்டரை மணி நேரமாக ஏவப்பட்ட ஷெல் லுக்குப்பயந்தே திருமதி. யேசு ரத்தினம் அணைபதுங்கு குழிக்குள் பதுங்கிக் கொண் டார்.

பிரசவ வேதனை ஏற்பட்டு துடிதுடித்த அருணைவுக்கு உதவ யாராலும் முடியாமல் போனது வெளியால் செல் லவோ, கார் பிடிக்கவோ, வைத்தியசாலைக்குச் செல் லவோ முடியாது போயிற்று எனினும் பதுங்கு குழிக்குள் சுகமாகக் குழந்தையைப் பிரசவித்த தாயை 'ஷெல்' அடி ஓய்ந்த பின்பே வெளியால் கொண்டு வரவும் வைத்திய மாதின் உதவியைப் பெறவும் முடிந்தது.

இந்தியா...

க்க வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். இந்தியா கடைப்பிடித்து வரும் அணி சேராக் கொள்கையிலிருந்து இலங்கை விடுபட்டது இந்திய அரசுக்கு ஆத்திரத்தை ஏற் படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

போதைவஸ்து விற்ற இருவர் புலிகளிடம் பிடிபட்டனர்

(அச்சுவேலி)

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட போதை வஸ்துகளை யாழ்ப்பாணத்தில் வைத்து வியாபாரம் செய்து வந்த ஒரு பெண் உட்பட இரு வர் புலிகளிடம் அச்சுவேலியில் வைத்து வகையாக மாட்டிக் கொண்டார்கள் நீண்ட நாட் களாக போதையில் புலம்பிய சிலரை நோட்டமிட்ட புலிகள் அவர்களுக்குப் போதைவஸ்து களை விநியோகித்து வந்தவரை கையுமெய்யுமாகப் பிடித்தனர். யாழ்ப்பாணம், திருமலை, வவுனியா போன்ற இடங்களில் இவ்வியா பாரத்தை செய்து வரும் மேற் படி இருவரிடமும் நாலாயிரம் ரூபா பெறுமதியான போதை வஸ்துகள் இருந்தன இவற்றை விற்பதன் மூலம் பத்தாயிரம் ரூபாவினை அவர்கள் வருமான மாகப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப் பட்டது.

ஆரியகுளம் சந்தி பகுதியில் போக்குவரத்து நெரிசல்

யாழ். பஸ்நிலையம் ஆரிய குளம் சந்திக்கு இடம் மாறி யதையடுத்து அப்பகுதிபோக்கு வரத்து நெரிசல்மிக்க இட மாக மாறியுள்ளது. மேலதிக மினி பஸ்களும், ஓட்டோரிக் ஷோக்களும் போக்குவரத்துச் சபை பஸ்களுடன் போட்டி போட்டுக்கொண்டு அவ் விடத்தை ஆக்கிரமித்துள்ள மையினால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

இதனால் அப்பகுதியில் அடிக் கடி விபத்துக்கள் ஏற்படுவது டன் போக்குவரத்துத் தடை களும் ஏற்படுகின்றன நேற்று நகரின் மேல் ஹெலிகப்டர் ஒன்று வட்டமிட்டு தாக்கு தலை மேற் கொண்டிருந்த சமயம் ஆரியகுளம் பகுதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெரி சலினால் பல வாகனங்கள் ஒன்றுடன் ஒன்றுசெருகுப்பட்டு பிரயாணிகளும், பாதசாரிகளும் வீண் சிரமங்களுக்கு உள்ளாக் கப்பட்டனர்.

அல்லைப்பிட்டி...

(22) என்பவராவர். குறிப் பிட்ட ஹெலிகப்டர் மண்டை தீவுப் பகுதியிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. மண் டைதீவு முகாமிலிருந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. காரைநகர் கடற்படையினரும் நேற்று முன்தினம் பிரங்கித் தாக்குதல்களை மேற்கொண் டன.

ஜே வி பி...

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி யினருக்குகாக நிதி திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டி ருந்தபோதே இம் மாணவர் கள் அனைவரும் கைது செய் யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இதைத் தவிர மேலும் நான்குபேர் ஜே. வி. பி. இயக் கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் வேறு இடங்க ளில் கைது செய்யப்பட்டார் கள். இவர்களிடமிருந்து கள வாடப்பட்ட பல பொருட் கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தார்கள்.

இளம் பெண் காயம்

கோட்டை ராணுவத்தினர் நேற்று அதிகாலை ஏவிய ஷெல் கள் சுண்டுக்குளியிலுள்ள வீடொன்றில் விழுந்ததினால் நித்திரையில் இருந்த இளம் பெண் காயமடைந்தார். காய மடைந்த கீதா அருள்சிங்கம் (23) யாழ். பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

மருத்துவ பீட...

காலை ஒன்பது மணியளவில் பல்கலைக்கழக வளவிலிருந்து ஆரம்பமாகும் இவ் ஊர்வலத் தில் அனைத்து அமைப்புக்களை யும், பொதுமக்கள் மற்றும் மாணவர்களையும்கலந்துகொள் ளுமாறு ஊழியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

முரசொலி கேடயத்துக்காக
ஜொனியன்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்தும் கிரிக்கெட் போட்டி
இம் மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில்
சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்
விபரங்கள் தொடர்ந்து வெளிவரும்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத் தினரால் யாழ்ப்பாணம், ஸ்ராண்லி வீதி, 62ஆ இலக்கத்திலுள்ள அவர் களது அச்சகப்பிரிவில் 07 - 05 - 87 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.